**சார்பு நீதிமன்ற, ஊத்தங்கரை**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| **அ.வ.எண்** | 202/2017 | **வா.சா** | 1 |
| **பெயர்** | அண்ணாதுரை | **வயது** | |
| **த/பெ** | | **ஊர்** | |
| **தொழில்** | | **வட்டம்** | |
| **சாதி** | | **மாவட்டம்** | |

The Oaths Act 1969, Act No.44/1969-ன் விதிமுறைகளின் படி 13.06.2023 நாளாகிய இன்று Tr.Senthil Kumar Rajavel,L.L.M., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என்னை சாட்சிமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு உள்ள ஆவணங்களை முறையே வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 10 வரை குறியீடு செய்து வழக்கில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்க கோருகிறேன். கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் 30.01.1976 தேதியிட்ட கிரய ஆவணம் உரிய மறுபயனுக்கு ஏற்படவில்லை பெயரளவிற்கு ஏற்பட்ட ஆவணம் என்று தெரிவித்த ஆட்சேபனைக்குட்பட்டு வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. இதர ஆவணங்கள் முறையே குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவண பரிசீலனை நாங்கள் தாக்கல் செய்த வழக்கினை தீர்ப்பு வழங்கவும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை**

2-ம் வாதி ஆனந்தி என் மனைவி ஆவார். நான் சேலம் அம்மாபேட்டையில் குடியிருக்கிறேன். எங்களது சொத்து எங்களுக்கு உரிமையானது என்று பரிகாரம்

கோரியுள்ளேம். தாவா சொத்து 3 ஏக்கர் 26 1/2 செண்டு ஆகும். தாவா சொத்து 2 இன சொத்துகளாக உள்ளது. தாவா சர்வே எண்.9 ஆகும். தாவா சொத்து ஒரு பழனி கவுண்டருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது. பழனி கவுண்டருக்கு தாவா சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது. பழனி கவுண்டர் தாவா சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் அனுபவித்து வந்து இருந்தார் என்பது தெரியாது. பழனி கவுண்டரிடம் இருந்து நான் கிரையம் பெறவில்லை எனது மாமனார் கிரையம் பெற்று இருந்தார். என் மாமனார் தாவா சொத்தில் குடிசை போட்டு சென்னையில் இருந்து வந்து தங்கி விவசாயம் செய்து வந்தார். கிரையம் பெற்ற உடன் என் மாமனார் தாவா சொத்தில் குடிசை போட்டு இருந்தார் மேற்படி குடிசை எப்போது வரை இருந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1999-ல் எனது திருமணம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு பிறகுதான் என் மாமனார் குடும்பத்துடன் போக்குவரத்து என்றால் சரிதான். அதற்கு முன்பு எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை என்றால் சரிதான். 1999 முன்பு என் மாமனார் குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே என் மாமனார் காலம் ஆகிவிட்டார். 1987-ல் என் மாமனார் இறக்கும் வரையில் அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் இருந்ததா என்றால் தெரியாது. 1987 முதல் பொது அதிகாரம் ஆவணம் எழுதிய தேதி வரையில் 1 முதல் 3 வாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. பொது அதிகாரம் ஆவணம் ஏற்படுத்திய சமயத்தில் தாவா சொத்தின் பட்டா சிட்டா 1-ம் பிரதிவாதியின் பெயரில் இருந்தது என்றால் சரியா தெரியவில்லை. பொது அதிகாரம் எழுதிய தேதியில் இருந்த வருவாய் ஆவணங்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் பத்திரம் இருந்தால் ஏற்படுத்தினோம்.

**(கற்றறிந்த பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க குறுக்கு விசாரணைக்கு வழக்கினை தள்ளிவைக்கப்படுகிறது).**

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai